கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2009/2010 (JULY/AUGUST - 2015)

# PHYS- **4204 – அறிகை மெய்யியல்**

# (Cognitive Philosophy)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி-I

01. அ) விஞ்ஞான தொழிநுட்ப விருத்தி எவ்வகையில் அறிகைநிலை விஞ்ஞான மெய்யியலின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்பதை விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) அறிகைநிலை விஞ்ஞான மெய்யியல் ஆராயும் முக்கிய பிரச்சினைகளை விளக்குக. (08புள்ளிகள்)

இ) "அறிகைநிலை விஞ்ஞானம் மனம் பற்றிய ஆய்வில் பூரணத்துவத்தினை பெற்றுக்கொள்ளவில்லை". இக்கூற்றினை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

02. அ) ஹோமோ சேபியன்ஸ் (Homo Sapiens) இனம் கொண்டிருந்த விஞ்ஞான அறிவிற்குரிய அடிப்படை பண்புகளை எடுத்துக்கூறி விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) சார்புவாதம் என்றால் என்ன? என்பதை விளக்கி, சார்புவாதம் பற்றிய சாதகமான விடயங்களை எடுத்துக் கூறுக. (08புள்ளிகள்)

இ) விஞ்ஞானக் கண்டுபிடிப்புச் செயன்முறையில் கூட்டு விஞ்ஞா சிந்தனை மற்றும் அதன் பகிர்வு பெறும் முக்கியத்துவத்தி ஆராய்க. (08புள்ளிகள்)

03. அ) விஞ்ஞான அறிவுச் செயன்முறையில் "முன்னைய நம்பிக்கை அல்ல அறிவு" எத்தகைய செல்வாக்கினை கொண்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துக. (09புள்ளிகள்)

ஆ) விஞ்ஞான சிந்தனையிலும், அரசியல் சிந்தனையிலும் உவமை பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

இ) "விஞ்ஞான அறிவுச் செயன்முறையில் கலாசார கூறுகளி செல்வாக்கு கனிசமான அளவிற்கு காணப்படுகின்றது". இக்கூற்றி தகுந்த உதாரணங்கள் கொண்டு விளக்குக. (08புள்ளிகள்)

04. அ) நுண்ணறிவு என்பதை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்? (10புள்ளிகள்)

ஆ) நுண்ணறிவிலிருந்து செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligenc வேறுபடுமாற்றை தெளிவுபடுத்துக. (15புள்ளிகள்)

## பகுதி –II

05. "உணர்வுநிலை" பற்றிய ஆய்வில் காணப்படும் அறிகைநிலை விஞ்ஞா மெய்யியல் பிரச்சினைகளை இனம்கண்டு விளக்குக. (25புள்ளிகள்)

06. உளவியலுக்கும் அறிகை மெய்யியலுக்குமான (Psychology – Cogniti Philosophy) தொடர்புகளை ஆராய்க. (25புள்ளிகள்)